2017 ஜனவரி 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் கேட்ட மூலக்கேள்வி நேரடி நெல் கொள்முதல் நிலையம் குறித்தது. நீங்கள், துணைக் கேள்வியில், சம்பந்தமில்லாமல் கேட்டீர்கள் என்றால் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில், அதற்கெல்லாம் பதில் இருக்காது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி, சொல்லி முடியுங்கள்.*

திரு. உ. மதிவாணன்: *நான் ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன். ஆளுநர் உரையின்போது அந்த கவன ஈர்ப்பு எடுத்துக்கொள்ளப்படாது என்ற காரணத்தால் விவசாயத் தொழிலாளர்களுக்கு. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதெல்லாம் இல்லை. அவ்வளவுதான். வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. இராமச்சந்திரன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

8—

ஜவுளிப் பூங்கா

***3998—திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னம் தொகுதி, வேப்பூர் ஒன்றியத்தில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓய்வு நான் அறியாதது; உழைப்பு என்னை நீங்காதது" என்ற என் தாய் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி துவங்குகின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) குன்னம் தொகுதி, வேப்பூர் ஒன்றியத்தில் ஜவுளிப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், அப்பகுதியிலுள்ள தொழில் முனைவோர் முன்வருவார்களேயானால் நடைமுறையிலுள்ள

ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டத்தின்படி இப்பகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னலம் கருதாமல், தமிழக மக்களின் நலன் கருதி தன் வாழ்க்கையை அர்ப்பணித்து, வாழ்ந்து மறைந்த நான் வணங்கும் தெய்வம் அம்மா அவர்களையும், அம்மாவின் வழியில் எங்களையெல்லாம் வழிநடத்த இருக்கும் சின்னம்மா அவர்களையும் வணங்கி, எங்களது குன்னம் தொகுதியில், வேப்பூர் ஒன்றியத்தில் ஆதி திராவிடர் மக்களும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களும் கூலித் தொழிலை அதிகம் நம்பி பிழைப்பு நடத்தக்கூடிய மக்களாக இருப்பதால், அங்கிருக்கக்கூடிய பெண்கள் நிறைய பேர் தையற்கலை பயின்று திருப்பூர், ஈரோடு மற்றும் கரூர் போன்ற பிற மாவட்டங்களுக்குச் சென்று பிழைப்பு நடத்தி வருகிறார்கள். தற்போதுகூட Classic Polo போன்ற ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் தனியார் நிறுவனம் ஓர் இடத்தை வாடகைக்கு எடுத்து அங்கே தொழில் தொடங்கியிருக்கிறார்கள். அங்கு நிறைய பெண்கள் வேலைக்குச் சென்று வருகிறார்கள். ஆகையால் அந்தப் பெண்கள் எல்லோரும் பயன்பெறும் வகையில் நமது அம்மாவின் தமிழக அரசு, ஒரு ஜவுளிப் பூங்காவை எனது குன்னம் தொகுதி, வேப்பூர் ஒன்றியத்தில் அமைத்துக் கொடுத்தால் ஏழையெளிய மக்கள் பயன்பெறுவார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் தெரிவித்து, விடைபெறுகிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் பெரம்பலூர் மாவட்டத்தில் ஜவுளிப் பூங்கா அமைக்க சிப்காட்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது. இந்தப் பூங்கா

2017 ஜனவரி 27]

வேப்பூரிலிருந்து சுமார் 35 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் ஆலத்தூர் வட்டம், பாடலூர் மற்றும் இரூர் கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பூங்கா, மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதிக்குப் பக்கத்தில் அமைந்திருக்கிறது என்பதை நான் இங்கே பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல் பெரம்பலூர் மாவட்டத்தில் ஒரு நெசவாளர் கூட்டுறவுச் சங்கமே உள்ளது. இச்சங்கத்தில் 298 கைத்தறி நெசவாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இங்கு வெங்கடகிரி பருத்தி ரக சேலைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இச்சங்கத்திற்கு ரூ.7,80,000/– காசுக்கடன் அனுமதிக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் 682 நெசவாளர்கள் தேசிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் பயன்பெற்று வருகின்றனர். எனவே, அவர்களுடைய நலன் பாதுகாக்கப்படுகிறது என்பதனை பெருமையோடு தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை விரைவில் அரசினுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. இராமச்சந்திரன் அவர்கள்.

முற்பகல் 11–05

திரு. ஆர்.டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது குன்னம் தொகுதியில் செந்துறை ஒன்றியத்தில் இருக்கக்கூடிய கூட்டுறவு நெசவாளர்களுக்கு, நமது அம்மா அரசு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த பசுமை வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. அதேபோல அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய தனியார் நெசவாளர்களுக்கும் பசுமை வீடுகள் கிடைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டு, விடைபெறுகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவருக்கும் வீடு என்கிற திட்டத்தில்,

[2017 ஜனவரி 27

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மைய அரசு வழங்குகிற ரூ.1.50 இலட்சம் நிதியோடு கூடுதலாக ரூ.60,000/—ஐ கொடுத்து ரூ.2,10,000/— மதிப்பிலான வீடுகளை கட்டிக் கொடுப்பதற்கான திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தில் நெசவாளர் பெருமக்களுக்கும் பங்களிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர்கள் பதில் அளிக்கிறபோதும், மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்வி கேட்கிறபோதும் மறைந்துவிட்ட நம்முடைய முதல்வர் அவர்களுடைய பெயரை உச்சரித்து அவருக்கு வணக்கம் செலுத்தி பேசுவது எனக்குப் புரிகிறது. ஆனால், ஓர் உறுப்பினர் சின்னம்மாவுக்கும் வணக்கம் என்றாரே, அது யார்? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள், இருங்கள். நீங்கள் உட்காருங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கு, அதாவது, அவர்களுடைய கட்சி பொதுச் செயலாளரை அவர்கள் சொல்கிறார்கள். (குறுக்கீடு) அதையெல்லாம் நீங்கள் சொல்லக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் உட்காருங்கள். உங்கள் கட்சியில் இருக்கிற தலைவர்களை நீங்கள் சொல்கிறீர்கள். இல்லை, இல்லை உங்கள் கட்சியினுடைய தலைவர்களை நீங்கள் சொல்கிறீர்கள். அதேபோல அவர்கள் அவர்களுடைய கட்சியினுடைய பொதுச் செயலாளர் அவர்களை அவர் சொல்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே ஒன்றுமில்லை, உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, அவ்வளவுதான். இதில் விவாதம் வேண்டாம். விடுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் உங்கள் கட்சித் தலைவர் பெயரைச் சொல்வதைப் பற்றி எந்த ஆட்சேபணையும் இல்லை. உட்காருங்கள் நீங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதில் ஒன்றும் இல்லை. இது குறித்து மேற்கொண்டு எந்த விவாதமும் இல்லை. நான் தெளிவாக என்னுடைய பதிலைச் சொல்லிவிட்டேன். எப்படி உங்கள் கட்சியினுடைய தலைவரைச் சொல்வதற்கு உங்களுக்கு உரிமையிருக்கிறதோ, அதேமாதிரி அவர்களுக்கும் அவர்களுடைய கட்சியினுடைய பொதுச் செயலாளர் பெயரைச் சொல்வதற்கு

2017 ஜனவரி 27]

உரிமையிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்பற்றி நீங்கள் கேட்க வேண்டாம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. கோவிந்தராசு, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

9—

குடியிருப்புகள்

***6223—திரு. மா. கோவிந்தராசு:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணி தொகுதியில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக வாடகைக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களால் நான், மக்களுக்காகவே நான் என முழங்கி, “ஓய்வு நான் அறியாதது, உழைப்பு என்னைவிட்டு நீங்காதது” என வாழும் காலம்வரை மக்கள் நலனுக்காகவே ஓய்வறியாது உழைத்து தெய்வமாகிவிட்ட இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின்மூலம் பேராவூரணி தொகுதியில் அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகள் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. கோவிந்தராசு அவர்கள்.